2018 ஜூன் 13]

182—

தார்ச் சாலை

***26967—திரு. அ. நல்லதம்பி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை நடுக்குப்பம் முதல் விளாங்குப்பம் வரை உள்ள மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலையிலுள்ள நடுக்குப்பம் வரையிலான இணைப்புத் தார்ச் சாலையானது, தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும், நடுக்குப்பத்திலிருந்து 4.80 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள விளாங்குப்பம் வரையிலான பாதையானது, பின்னர் ஜவ்வாது காப்புக் காட்டில் 2.7 மீட்டர் அகலத்தில் அனுமதிக்கப்பட்டு, அறிவிக்கையும் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் மற்றும் கால்நடைப் பயன்பாட்டில் உள்ள இப்பாதையைத் தார்ச் சாலையாக அனுமதிக்கப்பட்ட அகலத்தைவிடக் கூடுதலாக அமைக்க வேண்டுமாயின் வன நிலமும் கூடுதலாகத் தேவைப்படும். பொதுவாக வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி வனமல்லாத, non–forest பயன்பாட்டிற்கு வன நிலம் ஒதுக்கப்பட வேண்டுமாயின், மத்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறையால் இதற்கென உருவாக்கப்பட்டுள்ள இணையதளத்தில் சாலை அமைக்கும் துறை அதற்குரிய கருத்துருவினைப் பதிவேற்றம் செய்யும்பட்சத்தில், அனுமதி பெற தமிழ்நாடு வனத் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும், தங்களையும் வணங்குகிறேன். வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலையில் வாழும் மலைவாழ் பழங்குடி இன மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். புதூர் நாடு ஊராட்சி, விளாங்குப்பம் கிராமப் பகுதியில் வசிக்கும் மக்கள், தங்களின் வாழ்வாதாரமாக உள்ள விவசாயப் பொருட்களை சந்தைப்படுத்தவும், இப்பகுதியிலுள்ள மாணவ மாணவியர்கள் பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்லவும், புதூர் நாடு மற்றும் திருப்பத்தூர் நகருக்குச் செல்ல வேண்டியுள்ளது. நடுக்குப்பம் முதல் விளாங்குப்பம் வரையிலான இந்த அத்தியாவசியமான சாலையை அமைத்திட மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையால் இதற்காக உருவாக்கப்பட்டுள்ள இணையதளத்தில் தமிழக வனத் துறையின் மூலமே பதிவேற்றம் செய்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து முடித்துத் தருவாரா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்குதான், நான் முதலிலேயே பதில் சொல்லியிருக்கிறேன். உறுப்பினர் அவர்கள் மேற்படி சாலை அமைப்பது சம்பந்தமாக திருப்பி, வனத் துறையே அதற்கான இணையதளத்தில் பதிவு செய்யவும் என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். வனத் துறைதான் நடவடிக்கை எடுக்கும். ஆனால், எந்தத் துறை அந்தப் பணிகளை மேற்கொள்கிறதோ, DRDA, NABARD, Tribal Welfare Department போன்ற எந்தத் துறையாக இருந்தாலும், உரிய பிரேரணையை மத்திய அரசின் இணைய தளத்தில் பதிவு செய்தால், வனத் துறை உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும். அந்தந்த மாவட்டங்களிலிருக்கின்ற DFO, Rangers, Forest Officers போன்றவர்களிடம் இந்தத் தகவலைக் கொடுத்தால், அங்கிருக்கின்ற மாவட்ட வன அலுவலர்கள், இணையதளத்தின் மூலமாக மத்திய அரசின் இணையதளத்திற்கு உரிய முறையில்

2018 ஜூன் 13]

பதிவேற்றம் செய்து மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத் தருவார்கள் என்ற செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் வனக் கோட்டத்திற்குட்பட்ட, ஜவ்வாது மலை புங்கம்பட்டு நாடு ஊராட்சியில் உள்ள 10 குக்கிராமங்களில் வசிக்கும் மக்கள், அனைத்து அத்தியாவசியத் தேவைகளுக்காக சேர்க்கானூர் முதல் புதூர்நாடு வழியாக திருப்பத்தூர் நகருக்கு சுமார் 48 கிலோ மீட்டர் தூரம் வரை பயணிக்க வேண்டிய நிலை உள்ளது. அதனால் இப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு கால விரயமும், பண இழப்பும் ஏற்படுவதால் அவர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இதைப் போக்கிடும் வகையில், சேர்க்கானூர் முதல் கொடுமாம்பள்ளி வரை, சுமார் 4½ கிலோ மீட்டர் தார்ச் சாலை அமைக்கப்பட்டால், திருப்பத்தூர் நகரை 17 கிலோ மீட்டர் தூரம் பயணத்தாலே வந்தடைய முடியும். இச்சாலை அமைக்கவேண்டி கடந்த 23—3—2017 அன்று ஊரக வளர்ச்சித் துறையின் வாயிலாக, இணையதளத்தில் விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இருப்பினும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்தி, சேர்க்கானூர் முதல் கொடுமாம்பள்ளி வரையிலான தார்ச் சாலையை அமைத்துத் தருவாரா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேர்க்கானூர் முதல் கொடுமாம்பள்ளி வரை உள்ள பாதையினை அமைக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துணைக் கேள்வியாகக்கேட்டிருக்கிறார். சேர்க்கானூர் முதல் கொடுமாம்பள்ளி வரையில் உள்ள சுமார் 4 கிலோ மீட்டர் பாதையானது, ஆண்டியப்பனூர் காப்புக் காட்டுக்குள் அமைந்துள்ளது. இங்கு நடைபாதை வழிக்கான அனுமதி உரிமை* Right of Way *மட்டுமே உள்ளது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒரு தேதியைக் குறிப்பிட்டு அன்று விண்ணப்பிக்கப்பட்டிருப்தாகவும்*

செய்தியைச் சொல்லியிருக்கிறார். அப்படி எந்தச் செய்தியும் அங்கே இல்லையென்று, மாவட்ட வன அலுவலரிடமிருந்து தகவல் வந்திருக்கிறது. மறுபடியும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைச் சரிபார்த்து, நான் முதலில் சொல்லியதைப்போல், user agencies-ஆன DRDA, NABARD-Tribal Welfare Department போன்று எந்தத் துறை அங்கு சாலை அமைக்க விரும்புகிறதோ, அந்தத் துறையினர் எங்களுடைய மாவட்ட வன அலுவலரைத் தொடர்பு கொணடால், உரிய ஆணையை மத்திய அரசிடமிருந்து பெற்றுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலை தூரத்தைக் குறைக்கின்ற அந்தச் வழி, மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் இருப்பதனால், அதற்கு முன்னுரிமை அளித்து, மத்திய அரசின் ஆணையைப் பெற்றுத் தர முடியும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் தங்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய தேனி மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் அமைந்திருக்கிறது. பல கிராமங்கள் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் அமைந்திருக்கின்ற காரணத்தினால், அங்கே விவசாய நிலங்களில் குறிப்பாக தென்னை, வாழை போன்ற விவசாயப் பயிர்கள் பயிரிடப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10—20

அங்கே அடிக்கடி யானைகள் கிராமப் பகுதிக்குள் வந்து விடுகின்றன. விவசாய நிலங்களுக்கு அங்கே மிகப் பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அங்கே நேற்றைக்கு முதல் நாள் அதாவது 11 ஆம் தேதியன்று திரு. சேகர் என்பவர் தேவாரம் என்ற ஊரிலே யானை மிதித்து இறந்துவிட்டார். அவருக்கு உடனடியாக அரசாங்கம் ரூ.50,000/— வழங்கியிருக்கிறது. மீதமுள்ள பணத்தை உடனடியாக வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று

2018 ஜூன் 13]

கேட்டுக்கொள்கிறேன். யானைகள் தொல்லை தேவாரம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் இனிமேல் இல்லாத நிலையை ஏற்படுத்த நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள் அவருடைய சட்டமன்றத் தொகுதியிலும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய தொகுதி எல்லைக்குட்பட்ட தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் பகுதிகளிலும் உள்ள வனப் பகுதியில் இருக்கின்ற யானைகளால் ஏற்படும் பிரச்சினை பற்றி குறிப்பிட்டார்கள். ஒரு மாதத்திற்கு முன்பாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்களும், இன்னும் அந்தப் பகுதியில் இருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் அந்தப் பகுதிகளுக்கெல்லாம் சென்று பார்வையிட்டனர். யானைகள் ஊருக்குள் வராத அளவிற்கு, என்னென்ன முன்னேற்பாடுகள் செய்ய வேண்டும், அவற்றைத் தடுப்பதற்குரிய சூழ்நிலையை எப்படி உருவாக்க வேண்டுமென்றெல்லாம் திட்டம் தீட்டப்பட்டு, அதன் அடிப்படையில் அகழிகள் வெட்டும் பணிகளை மேற்கொள்ளுமாறு வனத் துறையின் அலுவலர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன.*

மேலும், அங்கே இதுபோன்ற புகார்கள் எதுவும் இதுவரை பெறப்படவில்லை என்றுதான் அரசு அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள். ஆனால், நேற்றைக்கு முன்தினம் நம்முடைய தமிழகத்தினுடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அங்கே ஒருவர் யானை தாக்கி இறந்துவிட்டதாகச் சொன்னார்கள். அவர் சொன்ன குறிப்பின் அடிப்படையில், உடனடியாக வனத் துறை அதிகாரிகளுடன் கலந்துபேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற நிவாரண நிதி ரூபாய் நான்கு இலட்சத்தில், (மேசையைத் தட்டும் ஒலி) முதல் கட்டமாக உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்க ஏதுவாக, அங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வனத் துறை அலுவலருக்கு ரூ.50,000/– முன்பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

[*2018 ஜூன் 13*

மீதம் இருக்கின்ற ரூ.3.50 இலட்சம் தொகை உரிய சான்றுகளைப் பெற்று உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு விரைவில் வழங்கப்படும் என்கிற நல்ல செய்தியை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அந்தப் பகுதியில் இனிமேல் யானைகள் மற்றும் பிற மிருகங்களால் பிரச்சினை ஏற்படாத அளவிற்கு நம்முடைய வனத் துறை அதிகாரிகளுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் அதைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மிக வேகமாக எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நான் உங்களுக்கு ஏற்கெனவே ஒரு மூலக் கேள்வி கேட்க அனுமதித்து, அவையில் துணைக் கேள்வியும் கேட்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, அனைத்து விவரங்களையும் நான் வைத்திருக்கிறேன். மேலும், இரண்டு துணைக் கேள்விகள் கேட்டிருக்கிறீர்கள். ஒரு மூலக் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) நேரமில்லை, அடுத்த கேள்வியில் வாய்ப்பிருந்தால் துணை வினா கேட்க அனுமதி அளிக்கிறேன்.*

வினா வரிசை எண் 183, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

183—

கூட்டுறவுக் கடன் சங்கம்

***8384—திரு. எஸ். ஈஸ்வரன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் தொகுதி, பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம், பனையம்பள்ளி மற்றும் பெரியகள்ளிப்பட்டி ஆகிய ஊராட்சிகளை